IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, PERUNDURAI

| | |
|---|---|
| RCS. No. | **656/2025** |
| Name | சுவாமிநாதன் |
| Father's Name | |
| Village | |
| Taluk | |

Solemnly affirmed in accordance with the provisions of the oaths Act 1969( Central Act 44 of 1969 ) of the day of **24.02.2026.**

1. நான் இந்த வழக்கில் நிகழ்நிலை புகார்தாரர் ஆவேன். நான் தற்போது செங்கல்பட்டில் இணை தலைமை சுற்றுச்சூழல் பொறியாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 05.07.2024 ம் தேதி பெருந்துறை தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாட்டு வாரியம் பொதுமக்கள் தொழிற்சாலை பிரதிநிதிகள் மற்றும் அரசு சாரா அமைப்புகள் குறைகளையும், நேரடியாக கேட்டு தீர்வு காண கலந்தாய்வு கூட்டம் நடைபெற்றது அன்று நடைபெற்ற கூட்டத்தில் என்னை சந்திக்க மறுத்து தரையில் அமர்ந்து கூச்சலிட்டு கொண்டிருந்தார்கள் அங்கு வந்வர்கள் என்னை சந்தித்து கருத்து தெரிவிக்க மறுத்து விட்டார்கள். அங்கு கூட்டமாக இருந்தது. ஏதேதோ சத்தமாக பேசிக் கொண்டிருந்தார்கள் அதனால் எனக்கு மன உளைச்சலும், உயிர் பயமும் ஏற்பட்டு காவல் நிலையத்தில் புகார் அளித்திருந்தேன். அதன் பேரில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டிருந்தது. அங்கு கூட்டம் கூடியவர்கள் கழிவுநீர், நிலத்தடி நீர்க் கசிவு போன்றவற்றை சொல்லும் போது ஏற்பட்ட சத்தத்தினாலே நான் புகார் அளித்திருந்தேன் பின்னிட்டு அவர்கள் எந்த விதமான உள்நோக்கமின்றியும் தனிப்பட்ட காரணங்கள் எதுவும் இன்றியும் பேசி உள்ளார்கள் என்று பின்னர் தெரிந்து கொண்டேன்.

2. எனவே எனது புகாரினை வாபஸ் பெற்றுக் கொள்ள வேண்டி 29.09.2025 ம் தேதி பெருந்துறை காவல் துறைக்கு கடிதம் ஒன்றினை நான் அனுப்பி வைத்தேன். அதன் பேரில் புலன் விசாரணையை முடித்து என்னுடைய புகாரின் மீது எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கவில்லை என்று இந்நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்துள்ளார்கள் எனத் தெரிந்து கொண்டேன். போலீசார் தாக்கல் செய்த குற்ற அறிக்கையில் எனக்கு எந்த ஆட்சேபணை இல்லை. வழக்கு முடித்துக் கொள்ள ஆட்சேபணை இல்லை.

Signature of the Witness

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல, என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு, சாட்சியால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியின் கையெழுத்து / கைரேகை பெறப்பட்டது.

நீதித்துறை நடுவர்,
பெருந்துறை.